**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.296/2009**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 08.08.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : துரைசாமி Father's Name : ராமசாமி

துவக்க நேரம்: 12.32 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**:

1) இவ்வழக்கின் வாதி ஜோதி எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயார் நான், 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் செல்லாது என விளம்புகை கோரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் மேற்படி கிரையமானது என்னை மிரட்டி பெறப்பட்டதால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். 1-ம் பிரதிவாதி என்னை மிரட்டி கிரையம் பெற்றுள்ள நிலையில் நான் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் 1-ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு வழங்கியுள்ளேன்.

2) நான், 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் கிரைய சொத்தானது 1998-ம் வருடம், 1393-எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து எனவும் எனது சுவாதீனத்தில் இருந்து வருகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த பத்திரம் எழுதப்பட்டபோது நான் அப்போதுதான் கல்லூரி படிப்பு முடித்து இருந்தேன். வீட்டில் மூத்த மகன் என்பதால் அவ்வாறு அந்த பத்திரம் எழுதப்பட்டது. மேற்படி பத்திரம், பத்திரத்தின் மதிப்பு ரூ.1 லட்சம்

40 ஆயிரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையபத்திரம் சரியான முத்திரைத்தாளுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பதிவு செய்யப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் மேற்படி கிரையபத்திரமானது பதிவு முழுமைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, பத்திரம் பதிவு செய்யப்பட்ட பின்புதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 20.11.2023 தேதியில் மேற்படி கிரையபத்திரத்திற்கு குறைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு பின்னர் பதிவு முழுமை பெற்றுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் நான் கடந்த 2021-ம் ஆண்டுவரையிலும் 1-ம் பிரதிவாதி கிரையபத்திரத்தை பதிவு செய்து பெற்றுக்கொள்ளவில்லை.

4) கடந்த 06.03.2002-தேதியிட்ட கிரையபத்திரம் செல்லாது என கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் வாதி இதுநாள்வரை மேற்படி கிரையபத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பாகம் சேரவேண்டும் என்றால் 1/3 பாகம் சேரவேண்டி உள்ளது. வாதியானவர் இவ்வழக்கை தாவா சொத்தில் பாகம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சகோதரி பெயர் கலா என்றால் சரிதான். எனது சகோதரியையும் சேர்த்து எனது அப்பாவின் வாரிசுகள் 4 நபர்கள் என்றால் எனது சகோதரி எங்கள் குடும்பத்திலிருந்து எதுவும் வேண்டாம் என கூறிவிட்டு சென்றுவிட்டார்.

5) எனது தாயார் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் தாவா சொத்தில் எனது சகோதரிக்கு பாகம் இல்லை என்றும் 1/3 பாகம் மட்டும் எனக்கும், வாதி, எனது சகோதரருக்கும் பாகம் உள்ளது என எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, எனது தாயார் படிப்பறிவு இல்லாத வயதானவர் ஆவார். இந்த தாவாவை எனது தூண்டுதலின்பேரில்தான் எனது தாயார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.03 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.296/2009 , Dt.08.08.2025.